Interdisciplinary Research Journal for Humanities

(A Peer - Reviewed Journal)

ISSN 2249-250X Volume - 14 No.2.2 (Special Issue) October 2024

# தமிழ்த்துறை
# தூய சவேரியார் கல்லூரி

(தன்னாட்சி)

(ஆற்றல்சால் கல்லூரி, பல்கலைக்கழக மானியக்குழு
தேசியத்தர மதிப்பீட்டில் 3.66 புள்ளிகளும் 'A++' தகுதியும் பெற்றது)

பாளையங்கோட்டை - 627002.

மற்றும்

வி ஜி பி உலகத் தமிழ்ச் சங்கம்

இணைந்து நடத்தும்

# வாழ்வியல் நோக்கில் திருக்குறள்

(தேசியக் கருத்தரங்கம்)



தொகுதி - 2

# Interdisciplinary Research Journal for Humanities

*(A Peer-Reviewed Journal)*


## தமிழ்த்துறை


**தூய சவேரியார் கல்லூரி (தன்னாட்சி)**

(ஆற்றல்சால் கல்லூரி, பல்கலைக்கழக மானியக்குழு)

தேசியத்தர மதிப்பீட்டில் 3.66 புள்ளிகளும் 'A++' தகுதியும் பெற்றது.

பாளையங்கோட்டை - 627002.

**வி ஜி பி உலகத் தமிழ்ச் சங்கம்**


இணைந்து நடத்தும்

# வாழ்வியல் நோக்கில் திருக்குறள்

## (தேசியக் கருத்தரங்கம்)




**ISSN 2249-250X**

**Volume – 14**

**No.2.2 (Special Issue)**

**October 2024**

| | | | |
|---|---|---|---|
| 35 | நா.சரண்யா | திருக்குறள் காட்டும் வாழ்வியல் நோக்கங்கள் | 182 |
| 36 | ச.சண்முகம் | திருக்குறள் உரையாசிரியர்களும்,ரோலன் பார்த்தும் | 187 |
| 37 | முனைவர்கா.சந்தானலெட்சுமி | திருக்குறள் காட்டும் மாந்தர் வாழ்வியல் | 191 |
| 38 | சை.ஜாபர் | வள்ளுவம் உணர்த்தும் வாழ்வியல் | 196 |
| 39 | இரா.பூங்குழலி | திருக்குறளின் ஆக்கப்பெயர்களும் அதன் மொழிபெயர்ப்புகளும் | 201 |
| 40 | முனைவர்ரா.ராமச்சந்திரன் | சமத்துவம் தரும் கல்வி : திருக்குறள் –நறுந்தொகை ஓர் ஒப்பீடு | 207 |
| 41 | முனைவர் மா.தே.அருண் மொழிநங்கை | திருக்குறள் வாழ்வியல் நோக்கில் ஊடலுவகை | 211 |
| 42 | முனைவர்கு.பத்மபிரியா | வாழ்வியல் நோக்கில் திருக்குறள் | 217 |
| 43 | முனைவர் ரா.ராஜேஸ்வரி | வாழ்வியல் நோக்கில் திருக்குறள் | 221 |
| 44 | ம.இந்துஜா பிருந்தா | திருக்குறள் வழி,வேள்பாரிபுதினத்தில் நட்புத்திறம் | 225 |
| 45 | க.மகேந்திரன் | திருக்குறள் வழி ஆடிப்பாவைபோலநாவலில் அரசியல் | 232 |
| 46 | ர.விஸ்வா.அண்ணாமலை | திருக்குறளில் சட்டக்கூறுகள் | 238 |
| 47 | அ.ரூபாதேவி | திருக்குறள் உணர்த்தும் நல்லறம் | 242 |
| 48 | முனைவர்யா.லலிதா | திருக்குறளில்வாழ்வியல் நெறிகள் | 248 |
| 49 | சா.அகஸ்டின் | மடல்ஏறுதல் குறள் வழி (நாணுத் துறவுஉரைத்தல்) | 253 |
| 50 | முனைவர் வ.மேரிகுயின் | திருக்குறளில் கல்வி | 258 |
| 51 | இரா.விஜயா | இடுக்கண் வருங்கால் நகுக | 262 |
| 52 | முனைவர் ஆ.இன்பன்ட் புஷ்பராஜ் | திருக்குறளில் வாழ்வியல் அறம் | 267 |
| 53 | முனைவர் ஆ.கன்னிமுத்து | திருக்குறளில் வாழ்வியல் நெறி | 272 |

ISSN 2249-250X

# திருக்குறள் வாழ்வியல் நோக்கில் ஊடலுவகை

முனைவர் மா.தே.அருண் மொழிநங்கை
தமிழ்த்துறை, ஹோலி க்கிராஸ் கல்லூரி,
நாகர்கோவில்.

**முன்னுரை**

ஊடலைப்பற்றிப் புலவி, புலவி நுணுக்கம், ஊடல் உவகை ஆகிய அதிகாரங்களில் அழகுற விளக்கி உள்ளார் வள்ளுவர். ஊடல் உவகையாவது ஊடலை உவந்து கூறியதாகும். இது புலவி நீங்கிப் புணர்ந்த தலைமகன் மற்றுள்ள நாட்கள் போல் இல்லாமல் இப்புணர்ச்சி பெரியதோர் இன்பம் உடையது என்பதற்குக் காரணமாக ஊடலை உவந்து கூறுதல் ஆகும். புலவிக்குப் பின்னால் நேரும் புணர்ச்சியால் கிடைக்கக்கூடிய இன்பம் பற்றிக் கூறுவதால் இது ஊடல் உவகை என்று அழைக்கப்படுகிறது. தலைப்பில் உள்ள உவகை என்னும் சொல் இவ்வதிகாரத்தில் எங்குமே இடம் பெறவில்லை. ஆனாலும் ஊடல் என்பதும் மற்றும் இதன் சார்பாக வரும் ஊடுதல், ஊடி, ஊடுக, புலத்தல், புலவி என்பன அதிகமாக பயின்று வந்துள்ளன.

**ஆதிஅந்தம்**

திருக்குறளில் ஆதியாக அகர முதல எனத் தொடங்கும் குறள் இடம் பெற்றுள்ளது. இறுதியாகத் திருவள்ளுவர் கூடி முயங்கப்பெறின் என்று நகரத்தில் முடித்துள்ளார். இது திருக்குறளுக்கு உரிய தனிச்சிறப்பாகும் என அறிஞர் பலரும் போற்றக் கூடியதாக இருக்கிறது. பரிமேலழகர் அகர முதல எனத் தொடங்கிக் கூடி முயங்கப் பெறின் என்று நிறைவு செய்கிறார். ஆனால், மற்ற உரையாசிரியர்கள் புலத்தலின் புத்தேள் நாடு உண்டோ நிலத்தொடு நீர் இயன்தன்ரையர் அகத்து என்னும் பாடலை இவ்வதிகாரத்தின் இறுதிப் பாடலாகவும் நூலின் நிறைவுப் பாடலாகவும் வைத்துள்ளனர். கலவி இன்பத்திலும் மிக்க இன்பம் தேவர் உலகத்தில் உண்டோ? என்பதும் இன்பம் மிகுதி பற்றிய பேச்சாக உள்ளது. ஊடல் உவகை வெளிப்படுத்துவதே இதன் நோக்கமாக இருக்கிறது. மேலும் அகத்து என முடியும் நூலின் இறுதிச்சொல் அகர முதல என்னும் முதல் பாடலை நினைவூட்டுவதாக அந்தாதி முறையில் உள்ளது.

**காதலியின் ஊடல்**

காதலி காரணம் இல்லாமல் காதலனோடு ஊடல் கொள்கின்றாளா? அல்லது காதலனிடம் தவறு கண்டு ஊடல் கொள்கின்றாளா என்பதை அவளே கூறுவதாக அமைத்துள்ளார் திருவள்ளுவர். அவரிடம் ஒரு தவறும் இல்லை ஆனாலும் ஊடலால் அவருடைய அன்பை மிகுதியாகப் பெறமுடிகிறது. அதனால் தான் ஊடுகிறேன் என்கிறாள். நிலத்தோடு நீர் கலத்தல் போன்ற ஒற்றுமையுடைய காதலரிடம் ஊடல்

கொள்வது தனி இன்பமாக இருக்கிறது. தேவர் உலகம் இத்தகைய இன்பத்தைத் தருமா?

"இல்லை தவறு அவருக்கு ஆயினும் ஊடுதல்
வல்லதுஅவர் அளிக்கும் ஆறு" (குறள்.1321)

"புலத்தலின் புத்தேள் நாடு உண்டோ நிலத்தோடு
நீரியைந் தன்னார் அகத்து" (குறள்.1323)

என்று காதலி கேட்கின்றாள். இந்தப் பிறப்பில் நாம் ஒருவரை ஒருவர் விட்டு பிரிவதில்லை என்கிறான் காதலன். அப்படியா அப்ப இந்தப் பிறப்பு மட்டும் தானா மறுபிறப்பில் பிரிய கருதிவிட்டாயா என்று ஊடல் கொண்டு கண்ணீர் விட்டுக் கலங்குகின்றாள்.

"இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனாக்
கண்ணிறைநீர் கொண்டனள்" (குறள்.1315)

என்பது வள்ளுவர் மொழி. பிரிந்து சென்றபோது நின்னை அடிக்கடி நினைத்தேன் என்கிறான் காதலன். பிரிந்தவுடன் என்னை மறந்துவிட்டாயோ என்று சொல்லி ஊடல் கொள்கின்றாள் காதலி.

"உள்ளினேன் என்றேன்மற்று என்மறந்தீர் என்றென்னைப்
புல்லாள் புலத்தக் கனள்" (குறள்.1316)

இவ்வாறு வள்ளுவர் வாய்மொழியாகச் சொல்லிச் செல்கிறார். காதலனுக்குத் தும்மல் வருகின்றது. தும்முகின்றான் வழக்கம்போல் காதலி நூறாண்டு வாழ்க என்று தும்மல் கேட்டு வாழ்த்துகின்றாள். ஆனால் தன் வாயால் வாழ்த்து பெறவேண்டும் என்றும் ஊடலை முடிக்க வேண்டும் என்றும் வேண்டுமென்றே காதலன் செயற்கையாகத் தும்மினான் என்று எண்ணுகின்றாள். ஊடல் முடிவது போய் அது அதிகமாகிவிட்டது அடுத்தநொடியில் அவள் மனத்தில் வேறொரு எண்ணமும் தோன்றியது. யாராவது நினைத்தால் தானே ஒருவருக்குத் தும்மல் வரும் என்று எண்ணுகின்றாள். இவரை யார் நினைத்திருப்பார்கள் நினைக்கும் உரிமை உடையவள் நான் ஒருத்திதான் என்று எண்ணியிருந்தேன். இன்னும் யாரோ ஒருத்தி இவருக்குக் காதலியாக இருக்கவேண்டும். அவள் நினைத்துதான் இவருக்குத் தும்மல் வந்தது என்று எண்ணிக் காதலனை நோக்கி யார் நினைக்க, தும்மல் வந்தது என்று கேட்டு ஊடல் கொள்கின்றாள். இதை உணர்ந்த காதலன் அடுத்த தும்மலை வெளிப்படுத்தாமல் அடக்கிக் கொள்ள முயல்கின்றான். அதை அறிந்த காதலி தெரிந்துவிட்டது உன் காதலி நினைக்கின்றாள் என்பது எனக்குப் புலப்படாதபடி நீ தும்மலை மறைக்கின்றாய் அதனால் தான் உனக்கு வரும் தும்மலை அடக்குகின்றாய் என்று சொல்லி அழுகின்றாள்.

"ஊடி இருந்தேமாத் தும்மினார் யாம்தம்மை
நீடுவாழ் கென்பாக்கு அறிந்து" (குறள்.1312)

 ISSN 2249-250X

இவ்வாறு வள்ளுவர் தும்மலையே ஒரு காரணமாக்கி ஊடுவதற்குக் காண்பிக்கின்றார்.

**காதலனின் ஊடல்**

புலத்தலின் புத்தேள் நாடு உண்டோ என்று காதலி கேட்பது போலவே காதலனும் கேட்கின்றான். தாமரைக் கண்ணனுடைய உலகம் காதலியின் மெல்லிய தோள்களில் துயிலும் துயில் போல இனிமை உடையதோ காதலி ஊடல் இன்பத்தைப் பேசும்போது புத்தேள் நாட்டைப் பற்றிக் குறிப்பிடுகிறாள். காதலன் புணர்ச்சி இன்பத்தைப் பேசும்போது தாமரைக் கண்ணான் உலகினைப் பற்றிக் குறிப்பிடுகிறான்.

**"தாம்வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல்**

**தாமரைக் கண்ணான் உலகு."** (குறள்.1103)

இந்தப் பாடல் தலைவனின் ஊடல் இன்பத்தைப் பற்றி விவரிக்கின்றது. காதலியின் ஊடலுக்குக் காதலனும் ஒப்புதல் வழங்குகின்றான். காதலியின் ஊடல் நீங்கிக் கூடிய காதலன் மிகுந்த மகிழ்ச்சியோடு தன்னுள்ளே சொல்லிக் கொள்கின்றான். தவறு ஒன்றும் இல்லாதபோதும் ஊடலுக்கு ஆளாகிக் காதலின் மெல்லிய தோள்களை நீங்கி இருக்கும் போது ஒரு தனி சிறப்புடைய இன்பம் கிடைக்கின்றது. உண்பதைவிட முன் உண்ட உணவு செரிப்பது இன்பமானது. அதுபோலக் காமத்தில் கூடுவதைவிட ஊடுதல் இன்பமானது. உடலில் தோற்றவரை வெற்றி பெற்றவராக அந்த வெற்றியை ஊடல் முடிந்த பின் நிகழும் கூடலில் காணலாம். இப்பொழுது இவளது நெற்றி வியர்க்கும்படியாகக் கூடுவதில் இன்பம் உள்ளது. மீண்டும் மீண்டும் இதைப் போன்ற ஒரு ஊடுதல் நான் பெறுவதற்கு விரும்புகின்றேன். ஒளிபொருந்திய அணிகலமுடைய காதலி இன்னும் எம்மோடு உடுவாளாக. அவ்வாறு அவள் ஊடி நிற்பதற்கும் அவளது உடலை தணிக்கும் பொருட்டு யாம் இரந்து நிற்பதற்கும் இரவு நீண்டதாக இருப்பதாக. காமத்திற்கு இன்பம் தருவதுஊடுதல் ஆகும். அந்த ஊடுதலுக்கு இன்பம் ஆவது அதை அளவறிந்து நீங்கி கூடித் தழுவ பெறுதல் ஆகும்.

**"தவறுஇலர் ஆயினும் தாம்வீழ்வார் மென்தோள்**

**அகறலின் ஆங்குஒன்று உடைத்து."** (குறள்.1325)

**"உடலினும் உண்டதுஅறல்இனிதுகாமம்**

**புணர்தலின் ஊடல் இனிது."** (குறள்.1326)

**"ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்குஇன்பம்**

**கூடி முயங்கப் பெறின்."** (குறள்.1330)

**தொல்காப்பியருக்கும் வள்ளுவருக்கும் உரிய வேறுபாடு**

வள்ளுவர் இரண்டு மனம் ஒன்று சேரும் இன்ப விருப்பத்தையே மருதம் என்று எங்கும் காண்கின்ற காப்பியச் சுவையினைப் புலவி நுணுக்கமாகச் சொல்கின்றார். ஊடுதலின் பெருமையாகத் திருவள்ளுவர் காமத்துப் பாலில் தான் கண்ட புதுமையை

 ISSN 2249-250X

விவரித்துச் செல்கின்றார். தொல்காப்பியரோ மருதத்தினை பரத்தையர் பிரிவு கொண்டே அழகு செய்கிறார். ஊடலைப் புதல்வர் எதிர் ஊடாமை பரதையர் ஒழுக்கத்தினை வெளிப்படையாகக் கூறாமல் உள்ளுறையாகச் சொல்லிச் செல்கிறார். ஆனால் அத்தகைய சூழ்ச்சிகள் ஒன்றும் செய்யாமல் மருத வாழ்வினைக் காதலின் அடிப்படையான ஊடல் வாழ்வின் வளர்ச்சி என்ற பேச்சு வள்ளுவரிடம் காணமுடியவில்லை. இதுவே வள்ளுவர் செய்த புரட்சியாகக் கொள்ளலாம். தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள் மற்றும் திருக்குறளுக்கும் பெரும் வேறுபாடு உண்டு. தலைவியின் ஊடலுக்கு முந்தைய நூல்கள் தலைவனின் பரத்தமையை ஒரு பெரும் காரணமாகச் சொல்கின்றன. அத்தகைய ஊடல் நீக்கத்துக்கு அன்பு குழந்தையை பிணக்கு தீர்க்க, கருவியாகப் பயன்படுத்தலும் உண்டு. இவ்வாறு சங்க இலக்கியங்கள் எடுத்துரைக்கும் காட்சிகளை நாம் காணமுடிகிறது. வள்ளுவரோ இக்கருத்துக்கெல்லாம் மாறுபட்டவர். முன்னோர் மொழிந்தவை என்பதற்காக அவர் அவற்றை பின்பற்றவில்லை. மரபுப் புரட்சியும் ,இலக்கணப் புரட்சியும், இலக்கியப் புரட்சியும் செய்தார் வள்ளுவர். தமிழ் மரபில் வள்ளுவர் செய்தவை செயற்கரிய செயல்களாகும். காமத்துப் பாலில் புலவி, புலவி நுணுக்கம், ஊடல் உவகை என ஊடலுக்கு மூன்று அதிகாரங்கள் எழுதியிருந்தும் தலைவனை பரத்தை ஒழுக்கம் உடையவனாக காட்ட அவர் விரும்பவில்லை. தலைவனை நன்னெறி படைத்தவனாகவே காட்ட விரும்புகிறார்.

**தோழிக்கூற்று**

'காதலரோடு ஊடல் கொள்ளாமல் அவருடைய அன்பை முழுமையாகப் பெறலாம் அல்லவா. ஏன் அவரோடு ஊடல் கொண்டு வருந்த வேண்டும்' என்று தோழி கேட்கிறாள். காதலி அவளுக்கு மறுமொழி கூறுகிறாள். ஊடலில் தோன்றும் சிறிய துன்பம் காதலரின் மிக்க அருளைப் பெறாவிட்டாலும் பெருமை பெறுவதாகும். அழகு உடையதாகும். மேலும், தவறில்லாமல் நிகழ்கின்ற ஊடல் விரைந்து நீங்குவதால் அத்துன்பம் நிலைக்காது. காதலரைத் தழுவிக் கொண்டு பின் விடாமலிருப்பதற்குக் காரணம் ஆகிய ஊடல் என்னுடைய உள்ளத்தை உடைக்க வல்ல படைக்கலம் போல் உள்ளது என்கிறாள் தலைவி.

> **"ஊடலில் தோன்றும் சிறுதுனி நல்அளி**
>
> **வாடினும் பாடுபெறும்." (குறள். 1322)**
>
> **"புல்லிவிடாஅப் புலவியுள் தோன்றும்என்**
>
> **உள்ளம் உடைக்கும் படை." (குறள். 1324)**

என்ற குறட்பாக்களைத் தோழி தலைவியிடம் வினாவும் பாங்கில் திருவள்ளுவர் எழுதியுள்ளார்.

 ISSN 2249-250X

உவமையுடன் ஊடலை எடுத்துரைக்கும் முறை:

ஊடல் கூடினாலும் குறைந்தாலும் காம இன்பம் பாதிக்கப்படும் என்பதைத் திருவள்ளுவர் அழகுற விளக்குகின்றார்.

**"உப்பு அமைந் தற்றால் புலவிஅதுசிறிது**

**மிக்கற்றால் நீள விடல்"**

என்று உப்பு கூடினாலும் குறைந்தாலும் உணவின் சுவை வீணாகிவிடும். இதிலிருந்து திருவள்ளுவரின் சமையல் கலை அறிவு புலப்படுகின்றது. இக்குறள் மூலம் சுவை உணர்வையும் புலப்பட செய்கின்றார். காமத்துப்பாலில் பல்வேறு குறட்பாக்களில் செடி கொடி இயல் தொடர்பான பல கருத்துக்களையும் திருவள்ளுவர் கூறியுள்ளார். வாடிய பயிருக்கு நீர் பாய்ச்ச வேண்டும். நீர் பாய்ச்ச வேண்டிய நிலையில் அதனை உருவாக்காமல் அதன் வேரை பறிப்பது கொடுமையான செயல் அல்லவா இதனையே உவமையாகச் சொல்லும்போது ஊடியவரை உணராமல் வாடியவள்ளி முதல் அரிந்தற்று என்று பாடுகிறார். இங்கு வள்ளி முதல் என்பது வள்ளிக்கொடியின் வேரைக் குறிக்கும். மேலும் மலரினும் மெலிது காமம் முகைமொக்குள் உள்ளது நாற்றம்போல் பூ அன்ன கண்ணார் கோட்டுப் பூ சூடினும் என்று மலர்களையும் அவற்றின் சிறப்புகளையும் பற்றிய செய்திகளையும் ஆங்காங்கே வள்ளுவர் எடுத்துரைக்கின்றார். திருவள்ளுவரின் மருத்துவத்துறை அறிவைப் பற்றி நாம் மருந்து எனும் அதிகாரத்தின் வாயிலாக அறிந்துள்ளோம். காமத்துப்பாலில் பல நுட்பங்களையும் மருந்தை அடிப்படையாக வைத்துக் கூறியுள்ளார். மருந்து என்பது நோய் தீர்க்க வல்லது. இதனையே உவமையாகக் கொண்டு தலைவியின் கள்ளமான குறிப்பு என் மிக்க துயரத்தைத் தீர்க்கும் மருந்து ஒன்றினை உடையதாக இருக்கின்றது என்று தலைவன் கூற்றாகப் பாடி உள்ளார்.

**"செறிதொடி செய்துஇறந்த கள்ளம் உறுதுயர்**

**தீர்க்கு மருந்தொன்று உடைத்து."**

உடல் பேண உண்ணுதல் அவசியம் உண்ட உணவு செரித்தல் அதைவி டமிகவும் அவசியமானது. இதனை வள்ளுவர்

**"மருந்தெனவேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது**

**அற்றது போற்றி யுணின்"**

என்று பொருட்பாலில் கூறிய திருவள்ளுவர் இன்பத்துப் பாலில் உண்பதைக் காட்டிலும் செரித்தல் மிக இனிது என்ற கருத்தை வலியுறுத்துகின்றார்.

**"உணலினும் உண்டதுஅறல் இனிதுகாமம்**

**புணர்தலின் ஊடல் இனிது" (குறள். 1326)**

இதன் மூலம் திருவள்ளுவரது மருத்துவப் புலமையை நாம் நன்கு அறிந்து கொள்ளலாம். எழுதுங்கால் கோல்காணாக் கண்ணேபோல் (குறள்.1285) என்று

ISSN 2249-250X

பெண்கள் கண்களுக்கு மையிடும் காட்சியைப் பாடுவதன் மூலம் அவரது உலகியல் அறிவு புலப்படுவதை நாம் காணமுடிகின்றது. ஊடலுக்கு ஓர் காரணமாக பரதையர் ஒழுக்கத்தை மட்டுமே சங்கப் புலவர் பலர் பாடியதுபோல் இவர் பாடாமல் புரட்சி செய்துள்ளார்.

**"ஊடலில் தோற்றார் வென்றார"** (குறள்.1327)

என்ற புதுமையாகவும் பாடியுள்ளார்.

**முடிவுரை**

இன்ப வாழ்வில் காணப்படும் மூன்று நிலைகளையும் திருவள்ளுவர் அழகாகக் காண்பிக்கின்றார். முதலாவதாகப் புணர்தல் இனிதாக அமைவதற்காக ஊடல் கொள்ளுதல். இரண்டாவது அந்த ஊடலை அழகாக நீக்குதல். மூன்றாவது அதன் பின் நடைபெறக்கூடிய புணர்தல். இவ்வாறு வாழ்வியல் நெறிமுறைகளை மிகவும் அழகுற எடுத்துரைத்துள்ளார். குடும்ப வாழ்வில் தலைவன் தலைவி எவ்வாறு தங்கள் வாழ்வினை அமைக்க வேண்டும் என்பதை எளிமையான முறையில் அனைவரும் புரிந்துகொள்ளும் விதத்தில் எடுத்துரைத்துள்ளார். திருமணவாழ்வில் ஏற்படக்கூடிய இன்பம் குறையும்போது ஊடுதல் ஏற்பட்டு அந்த ஊடுதல் அளவறிந்து இருந்து, அதனால் புணருறுதல் ஏற்படவேண்டும் என்பதே திருவள்ளுவரின் நோக்கமாக இருந்திருக்கிறது. அவர் வாழ்வியலை மிகவும் அழகுற ஆய்ந்து ஒரு அறிவியல் போக்கில் எடுத்தாண்டுள்ளார். மனிதன் இயற்கையாக வாழக்கூடிய அந்த ஊடலை அவர் மிகவும் அழகுற மூன்று அதிகாரங்களாகவே படைத்துக் காண்பிக்கின்றார். வாழ்வியல் நோக்கில் காணும்போது ஒவ்வொரு உயிரினத்திற்கும் அவசியமான ஒன்றை மனித வாழ்வில் எவ்வாறு கடைபிடிக்க வேண்டும் என்ற அறநெறிப்படி எடுத்துரைப்பதைக் காண்கின்றோம்.

**துணை நூற்பட்டியல்**

ஆதிரையான், குறள் நெறிகள் காதலர், அழகுப் பதிப்பகம், காரைக்குடி,1960.
ச.சாம்பசிவன், உடம்பும் உயிரும், பசவேஸ்வரா பிரசுரம், கிருஷ்ணகிரி,1965.
வீ.முனுசாமி, திருக்குறள் இன்பம், முத்து புத்தக நிலையம், திருச்சி,1960.
பாலசுப்பிரமணியன், வள்ளுவம் வகுக்கும் இன்பம், பாரி நிலையம், சென்னை,1972.



# Interdisciplinary Research Journal for Humanities

(A Peer - Reviewed Journal)

ISSN 2249-250X Volume - 14 No.2.2 (Special Issue) October 2024




வெளியீடு

தமிழ்த்துறை, தூய சவேரியார் கல்லூரி (தன்னாட்சி), பாளையங்கோட்டை-02.

தமிழ்த்துறை

# தூய சவேரியார் கல்லூரி (தன்னாட்சி)

( ஆற்றல்சால் கல்லூரி, பல்கலைக்கழக மானியக்குழு
தேசியத்தர மதிப்பீட்டில் 3.66 புள்ளிகளும் 'A++' தகுதியும் பெற்றது. )
பாளையங்கோட்டை - 627 002.

ST. XAVIER'S COLLEGE (AUTONOMOUS) PALAYAMKOTTAI
Since 1923

50 1971 - 2021

36 nirf Rank

## தேசியக் கருத்தரங்கம் (NATIONAL SEMINAR)

## வாழ்வியல் நோக்கில் திருக்குறள் (THIRUKKURAL'S PERSPECTIVES ON LIFE)

01 அக்டோபர் 2024

# சான்றிதழ்

தூய சவேரியார் கல்லூரித் தமிழ்த்துறையும், உலகத் தமிழ்ச்சங்கமும்
(Interdisciplinary Research Journal for Humanities (A Peer-Reviewed Journal) ISSN 2249-250X Volume-14 No.2.2 (Special Issue) October 2024)
இணைந்து 01.10.2024 – அன்று "வாழ்வியல் நோக்கில் திருக்குறள்" என்னும் தலைப்பில் நடத்திய தேசியக் கருத்தரங்கில்

திரு./திருமதி **முனைவர் மா.தே.அருண் மொழி நங்கை,**

**(ஹோலி கிராஸ் கல்லூரி (தன்னாட்சி), நாகர்கோவில்.) அவர்கள்**

**திருக்குறள் வாழ்வியல் நோக்கில் ஊடலுவகை**

என்னும் தலைப்பில் ஆய்வுக் கட்டுரையை வழங்கியமையைப்
பாராட்டி இச்சான்றிதழ் வழங்கப்படுகிறது.

| திரு.ர. விஸ்வா அண்ணாமலை | முனைவர் ப.விமலா | முனைவர் அ. ஜான்பால் | முனைவர் சு. ஜா. இதயராஜா | அருட்பணி முனைவர் டி. காட்வின் ரூபஸ் சே.ச., |
| --- | --- | --- | --- | --- |
| | பதிப்புக்குழு | | தமிழ்த்துறைத்தலைவர் | முதல்வர் |